www.Padasalai.Net www.CBSEtips.in

முதல் பருவத் தேர்வு - 2023

தமிழ்

வகுப்பு : 7
காலம் : 2.00 மணி

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 60

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10

1. நெறி என்னும் சொல்லின் பொருள் .....
   அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்
2. வாய்மை எனப்படுவது .....
   அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்கு தராத சொற்களைப் பேசுதல்
   இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்
3. கல் + அளை என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....
   அ) கல்லளை ஆ) கல்அளை இ) கல்லளை ஈ) கல்லுளை
4. சொல்லின் முதலில் மட்டுமே இடம்பெறுவது .....
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம் இ) மகரக் குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

5. ஒலியின் வரி வடிவம் ..... ஆகும்.
6. "காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு" என்று அழைக்கப்படும் விலங்கு .....

III. பொருத்துக.

7. பொக்கிஷம் – அழகு
8. சாஸ்தி – செல்வம்
9. விஸ்தாரம் – மிகுதி
10. சிங்காரம் – பெரும்பரப்பு

IV. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும். 5x2=10

11. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
12. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?
13. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?
14. பேச்சு மொழி என்றால் என்ன?
15. காடு வரையறுக்க.
16. மகரக் குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
17. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

V. கீழ்க்காணும் வினாக்களுள் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x4=12

18. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
19. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.
20. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் நான்கினை எழுதுக.
21. புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.
22. பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

VI. அடியிறழாமல் எழுதுக. 4+2=6

23. அ) "அருள்நெறி ....." எனத் தொடங்கி ".....அன்பறமே" என முடியும் "எங்கள் தமிழ்" பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) "சிற்றில் நற்றூண் பற்றி ....." எனத் தொடங்கும் "புறநானூறு" பாடலை எழுதுக.

24. "இயற்றலும்....." எனத் தொடங்கும் குறளை எழுதுக.

VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x2=10

25. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.
அ) முக்கனி..... ஆ) நாற்றிசை .....

26. பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.
அ) பசு கன்றை ஈன்றன. ஆ) குழலி நடனம் ஆடியது.

27. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.
அ) சிறுவன் x ..... ஆ) தோழி x .....

28. கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.
அ) நான் படிக்கும் வகுப்பு .....
ஆ) தமிழ் இலக்கணம் ..... வகைப்படும்.

29. கலைச் சொல் எழுதுக.
அ) Linguistics ஆ) Wild Animals

VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2x6=12

30. அ) "சொலவடைகள்" பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

(அல்லது)

ஆ) ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார் ?

31. அ) பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.
முன்னுரை – மொழி பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப் பற்று கொண்ட சான்றோர்– சாதுவன் வரலாறு – முடிவுரை.

(அல்லது)

ஆ) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com